**செய்தி வெளியீடு எண்: 975** **நாள்:19.12.2020**

**<u>இன்று (19.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளியில் நடைபெற்ற அரசு விழாவில் முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை திறந்து வைத்து ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இன்றையதினம் எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளியில் ஏழை, எளிய மக்களுக்கு, உங்கள் பகுதியிலேயே மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, கிராமங்களிலிருந்து நகரம் வரை ஏழை, எளிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில், மக்களுக்குச் சிறப்பான மருத்துவ சிகிச்சை அளிக்க முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டு, தமிழகம் முழுவதும் 2,000 முதலமைச்சர் அம்மா மினி கிளினிக் தொடங்கப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் இன்று மட்டும் நான்கு இடங்களில் தொடங்கப்படுகிறது. காலையில் நங்கவள்ளி ஒன்றியம், பெரியசோரையில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் திறந்து வைக்கப்பட்டது. இப்போது இருப்பாளியில் திறந்துள்ளோம்.

கிராமத்தில் வாழ்கின்ற ஏழை, எளிய மக்களுக்கு அந்தந்தப் பகுதிகளிலேயே, முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் துவங்குகின்றபோது, அவர்களுக்கு காய்ச்சல், தலைவலி மற்றும் சிறிய நோய்கள் ஏற்பட்டால் உடனடியாக அம்மா மினி கிளினிக்கை நாடி தங்களுடைய நோயை குணப்படுத்திக் கொள்ளலாம். இங்கே ஒரு எம்.பி.பி.எஸ். மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர், ஊரகப் பகுதிகளில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும், நகரப் பகுதிகளில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் நோயாளிகளுக்கு பரிசோதனை செய்து உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பார்கள். முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கில் சிகிச்சை பெற வரும் மக்களுக்கு கடுமையான நோய் ஏதேனும் தாக்கியிருந்தாலோ அல்லது அறுவை சிகிச்சை செய்து குணமடையச் செய்ய வேண்டிய நிலையிலிருந்தாலோ ? மினி கிளினிக் மருத்துவரே, அவர்களை மேல் சிகிச்சைக்காக சேலம், தலைமை மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

பக்கநாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று செயல்படுத்தினோம். கால்நடை மருந்தகம், பாதுகாக்கப்பட்ட காவேரி குடிநீர் கொடுத்துள்ளோம். எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி மூன்று ஒன்றியங்களையும் உள்ளடக்கி எடப்பாடி–மகுடஞ்சாவடி கூட்டுக் குடிநீர் திட்டத்தை அம்மா அவர்கள் கொண்டு வந்ததை நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளோம். குருக்குப்பட்டி, வெள்ளரிவெள்ளி, குஞ்சாம்பாளையத்தில் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், வெள்ளரிவெள்ளி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தியுள்ளோம்.

செல்லம்பட்டி, காட்டுப்பாளையம், நாயக்கர் தெரு ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகளை திறந்துள்ளோம். அனைத்து அங்கன்வாடிக்கும் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுத்துள்ளோம். தொகுப்பு வீடுகள், பசுமை வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளோம். இருப்பாளியில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளோம். நெடுஞ்சாலைத் துறை பராமரிக்கின்ற சாலைகளை, சீர் செய்துள்ளோம். கிராமச் சாலைகள் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இருப்பாளி மக்கள் வைத்த பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்துள்ளேன்.

இருப்பாளி வறண்ட பகுதியாக இருப்பதால், மேட்டூர் அணையிலிருந்து வெளியேறும் உபரி நீரை ஏரிகளில் நிரப்பித் தந்துள்ளோம். அதற்கான பூமி பூஜையில் நானே கலந்து கொண்டேன். ரூபாய் **568** கோடி மதிப்பீட்டில் இத்திட்டப் பணி நடந்து கொண்டிருக்கிறது, இன்னும் **3** மாத காலத்திற்குள் பணி நிறைவு பெற்று, நானே நேரடியாக வந்து திறந்து வைப்பேன்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த **41** விழுக்காடு மாணவச் செல்வங்களுக்கு **7.5** விழுக்காடு மருத்துவக் கல்வி பயில உள் இடஒதுக்கீடு கொடுத்து, அவர்களின் கனவை நனவாக்கி, மருத்துவ உலகில் சாதனையை நாங்கள் படைத்திருக்கிறோம். இந்த ஆண்டு **313** மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளிலும், **87** மாணவ, மாணவியர்களுக்கு பல் மருத்துவக் கல்லூரிகளிலும் இடம் கிடைத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும், அரசுப் பள்ளிகளில் **41** விழுக்காடு படிக்கும்

மாணவச் செல்வங்களில், கடந்த ஆண்டு 6 மாணவர்களுக்குத் தான் மருத்துவப் படிப்பிற்கான இடம் கிடைத்தது. இப்போது புதிதாக 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை ஒரே நேரத்தில் தொடங்கியதன் விளைவாக கூடுதலாக 1,650 இடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதனால், சுமார் 135 மாணவச் செல்வங்கள் மருத்துவப் படிப்புப் படிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, அடுத்த ஆண்டு சுமார் 435 மாணவச் செல்வங்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்கும்.

சாலை, மருத்துவம், குடிநீர் என பல்வேறு வசதிகளை செய்து கொடுத்துள்ளோம். வேளாண் பெருமக்களுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனுதவி கிடைக்கச் செய்துள்ளோம். வட்டியில்லா பயிர்க் கடன், 50 விழுக்காடு மானிய விலையில் டிராக்டர், பவர் டிரில்லர் கொடுக்கிறோம். பண்ணைத் திட்டத்தில் உதவி செய்கிறோம். நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் நிதியுதவி செய்கிறோம். இவ்வாறு ஏராளமான திட்டங்களை அம்மாவின் அரசு விவசாயிகளுக்கு செய்து கொண்டிருக்கிறது.

எடப்பாடி சட்டமன்ற தொகுதி முதலமைச்சர் சட்டமன்றத் தொகுதி என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் தமிழகத்தில் எங்கு சென்றாலும், நீங்கள் எடப்பாடி தொகுதியைச் சேர்ந்தவர் என்று சொன்னால் உங்களுக்கு பெருமை கிடைக்கும். தமிழகத்தில் 234 தொகுதிகள் இருந்தாலும், எடப்பாடி சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்தான் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கின்றார் என்ற பெருமை உங்களுக்குக் கிடைத்துள்ளது. நான் என்றைக்கும் முதலமைச்சராக நினைக்கவில்லை. என் முன் அமர்ந்திருக்கின்ற அனைவரையும் முதலமைச்சர் என்று கருதிக் கொண்டிருக்கிறேன். உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதுதான் என் பணி. அதனை சிந்தாமல், சிதறாமல் நான் செயல்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் உழைக்கும் திறனற்ற முதியவர்களுக்கு முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு பட்டா மாறுதல்கள், விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியுள்ளோம்.

**தமிழர்களின் திருநாளாம் தைத் திருநாள் வரவிருக்கிறது. தமிழர்களின் திருநாளே தைப் பொங்கல் தான். அந்த தைப் பொங்கலை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் அரசு பொங்கல் பரிசு அறிவித்து வழங்கி வருகிறது. இந்த ஆண்டை பொறுத்தவரைக்கும், கொரோனா வைரஸ் தொற்று பரவல் ஏற்பட்டு பலருக்கு வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலை, டெல்டா பகுதிகளிலே புயலினால்**

**கடுமையான மழை, அங்கே தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் கொரோனாவால் வேலை இழந்திருக்கின்ற சூழ்நிலை, புயலால், கன மழையால் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கின்ற சூழ்நிலை ஆகிய இரண்டும் இந்த ஆண்டை பாதித்திருக்கிறது. இதையெல்லாம் அரசு கருத்தில் கொண்டு, இன்றைக்கு தைப் பொங்கலை தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை தமிழர்களும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக தமிழகத்தில் உள்ள 2 கோடியே 6 லட்சம் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் ரூபாய் 2,500/– வழங்கப்படும். 2021–ஆம் ஆண்டு ஜனவரி 4–ஆம் தேதியிலிருந்து இந்த திட்டம் அமல்படுத்தப்படும். அத்துடன், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு துண்டு கரும்புக்கு பதிலாக ஒரு முழு கரும்பு, 20 கிராம் உலர் திராட்சை, 20 கிராம் முந்திரி, 5 கிராம் ஏலக்காய், ஒரு நல்ல துணிப்பை ஆகியவை கொடுக்கப்படும். தமிழர்களுடைய திருநாளான தைத் திருநாளை மிகச் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மாவுடைய அரசு இதை அமல்படுத்தும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு முன்பு, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் துறையினைச் சேர்ந்த அதிகாரிகள் வீடு, வீடாகச் சென்று டோக்கன் கொடுப்பார்கள். அந்த டோக்கனில் எந்தெந்த தேதியில் யார் வர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கும். அந்த தேதியில் நீங்கள் நியாய விலை கடைக்கு சென்றால் போதும். அப்போது தைப் பொங்கல் தொகுப்பை உங்களுக்கு வழங்குவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.**

நான் இந்தச் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்து முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். உங்களுடைய அன்பு எப்போதும் எங்களுக்கு இருக்கும் என்று கூறி நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

––––––

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**